# சமூக நலப்பணிகளில் பெண் ஆலிமாக்களின் வகிபாகம் - மருதமுனை பிரதேசத்தை மையப்படுத்திய கள ஆய்வு

# The Role of *Aalimas* in Social Welfare: a field research based on Maruthamunai

M.J.F. Jatha[1], S.M.M. Mazahir[2] & M.R.F. Ahana[3]

[1&3] *Department of Arabic Language, South Eastern University of Sri Lanka* [2] *Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka*

[1]*vahajsana@gmail.com*, [2]*mazahirsmm@seu.ac.lk*, [3]*fathimaahana96@gmail.com*

***ABSTRACT***

*Human beings need to help each other. Social welfare activities bring an ending point to the problems of the poor and needy in the society. There are many social welfare activities that bring the kind and benevolence among human beings. At the same time, it is essential that both men and women in the society should involve in these activities. Accordingly, this research explores the role of female Aalimaths in social welfare activities carried out in Maruthamunai region. Thus, this research tries to identify the social involvement of them and to identify the individual, family, social causes of their uninvolvement in social activities. This research uses descriptive methodology through mixed approach by gathering primary and secondary data. It finds that the women in this area have desire in educational activities. At the same time, they have no enough social relations among the society. Thus, they are facing difficulties in engaging the social welfare activities.*

***Keywords:*** *Aalimas, Maruthamunai, Da'wa Organizations, Social Welfare*

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதர்களுக்கிடையில் ஒருவருக்கொருவர் உதவிசெய்வது இன்றியமையாத ஒரு விடயமாகும். சமூக நலப்பணிகள் மேற்கொள்ளப்படுவதன் மூலம் சமூகத்திலுள்ள ஏழை மக்களினதும், தேவையுடையோரினதும் பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்படுகின்றன. மனிதர்களுக்கிடையில் அன்பு, பரோபகாரம் போன்றவற்றை ஏற்ப்படுத்தக்கூடிய வழியாக சமூக நலப்பணிகள் காணப்படுகின்றன. இப்பணிகளில் சமூகத்திலுள்ள ஆண், பெண் இருபாலாரும் ஈடுபடுவது இன்றியமையாத ஒன்றாகும். அந்த வகையில் இவ்வாய்வானது சமூகநலப்பணிகளில் பெண் ஆலிமாககளின் வகிபாகம் தொடர்பாக மருதமுனைப் பிரதேசத்தை மையப்படுத்தி ஆராயப்பட்டுள்ளது. தற்காலத்தில் முஸ்லிம் சமூகத்தில் பரவலாக சமூகநலப்பணிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அவை குறிப்பாக ஆண்களினாலேயே அதிகம் மேற்கொள்ளப்படுகின்றன. பெண்கள் சமூகநலப்பணிகளில் காட்டும் ஆர்வம் குறைவாகவே காணப்படுகின்றது. இவ்வாய்வானது மருதமுனைப் பிரதேசத்தில் ஆலிமாப் பெண்களின் சமூக ஈடுபாடு எவ்வாறுள்ளது என்பதை கண்டறிவதுடன் அவர்கள் சமூகநலப்பணிகளில் ஈடுபடாமைக்கான காரணங்களைக் கண்டறிதல், அவற்றை நிவரத்தி செய்வதற்கான ஆலோசனைகளை முன்வைத்தல் போன்றவற்றை நோக்கங்களாகக் கொண்டுள்ளதுடன் அவர்களின் சமூக வகிபாகத்தை அதிகரிக்கச் செய்வதும் இவ்வாய்வின் நோக்கமாகும். விபரிப்பு முறையியலில் தொகை சார், பண்பு சாரான இவ்வாய்வில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்

*தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இறுதியாக இப்பிரதேச ஆலிமாப் பெண்கள் சமூகநலப்பணிகளில் ஈடுபடுவதற்குத் தடையாக இருக்கின்ற விடயங்கள் கண்டு அறியப்பட்டுள்ளன. இன்றைய காலத்தைப் பொறுத்தவரையில் இப்பிரதேசத்திலுள்ள முஸ்லிம் பெண்கள் அதிகமாகவே கல்வி நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டுகின்றனர். இவ்வாய்வு மருதமுனைப் பிரதேச ஆலிமாப் பெண்களில் பெரும்பாலானோர் சமூகத்தொடர்பு எதுவுமின்றி தங்களை வீடுகளுக்குள்ளேயே சுருக்கிக் கொள்கின்றனர். மேலும் சமூகப்பணிகளில் ஈடுபடுவதற்காக வெளியில் செல்வதில் பல சவால்களை பெரும்பாலானோர் எதிர்கொள்கின்றனர். இவர்கள் எதிர்நோக்கும் சவால்களை களைந்தெறிவதன் மூலம் சமூகநலப் பணிகளை மேலும் சமூகத்தில் அதிகரிக்கலாம்.*

***திறவுச்சொற்கள்:*** *ஆலிமாக்கள், மருதமுனை, தஃவா அமைப்புக்கள், சமூகநலப்பணி*

---

### *1. ஆய்வு அறிமுகம்*

*சமூக நலன்களில் கவனம் செலுத்தி தேவையான உதவிகளை மேற்கொள்வது மனித வாழ்வில் இரண்டரக் கலந்த பணிகளில் முதன்மை பெறுகிறது. பொதுவாக ஒட்டுமொத்த மனித சமூகமும் இப்பணிக்கு உன்னதமானதோர் இடத்தை வழங்கியுள்ளது. இது ஆண், பெண் வேறுபாடின்றி முழு உலகிலும் வலியுறுத்தப்படுகின்ற ஒரு பணியாகும்.*

*சமூகத்தின் மேன்மைக்கும் மேம்பாட்டிற்கும் அடிப்படையாக அமையும் விடயங்களுள் சமூகநலனும் ஒன்றாகும். அதனை மேற்கொள்ளும் போது ஒழுக்கப் பண்பாடுகள் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. பொதுவாக இஸ்லாம் வளரந்;தோங்க முக்கிய காரணியாக சமூகநலப் பணிகளே தொழிற்பட்டுள்ளது. இதனையே நபி(ஸல்) 'நான் நற்குணங்களைப் பூரணப்படுத்துவதற்காகவே அனுப்பப்பட்டேன்'. (அஹ்மத்) எனக் கூறினார்கள்.*

*ஒருவர் சமூகத்திற்கு மத்தியில் ஒரு பணியை நிறைவேற்ற வேண்டுமென்றால் அவர் பற்றிய நன்மதிப்பீடு முக்கியமானது. அதனால்தான் அனைத்து நபிமார்களும் தங்களுடைய பணியை சமூகத்தில் மேற்கொள்வதற்காக ஒழுக்கப் பண்பாடுகளையே ஆயுதமாகக்கொண்டு வெற்றி பெற்றனர். சமய பண்பாட்டு அமைச்சினால் பதியப்பட்ட அரபுக் கலாசாலைகளில் பட்டம்பெற்ற ஆலிமாப் பெண்கள் தாங்கள் மேற்கொள்ள வேண்டிய சமூகநலப்பணிகள், சீர்திருத்தப் பணிகளை மறந்து பராமுகமாக செயற்பட்டுவருகிறார்கள். ஏன் இவ்வாறு இவர்கள் ஆர்வமில்லாமலும், கடமையுணராமலும் செயற்பட்டு வருகின்றனர் என்ற வினாவைக் கொண்டே நாம் எமது ஆய்வினை மேற்கொண்டுள்ளோம்.*

*அரபுக் கல்லூரிகளில் பட்டம் பெற்று வெளியாகிய ஆலிமாக்கள் தங்கள் குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் முன்மாதிரியாக திகழ்வதுடன் சமூகசேவைகளிலும் அவர்கள் பங்கெடுத்து அங்கம் வகிக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும். இவ்வாறு தங்களது பணியை மறந்து சுயமாகச் செயற்படும் ஆலிமாப் பெண்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான வசதிகளை அமைத்துக்கொடுத்து அதற்காக ஆர்வமூட்ட வேண்டிய தேவையும் உள்ளது.*

*இவ்வுலகில் பல்வேறு வகையான சமூகநலப்பணிகள் உள்ளன. அவற்றில் ஈடுபடுவதன் மூலம் சமூகத்தில் மரியாதைக்குரிய ஒருவராகவும், அல்லாஹ்விடத்தில் சிறந்த அடியானாகவும் திகழலாம்.*

*பல்வேறு வகையான மக்கள் சமூகத்தில் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு தேவையுடையவராகவே காணப்படுகிறார்கள். இதில் சிலர் தங்களுடைய தேவைகளை மற்றவர்களிடம் சொல்லி நிறைவேற்ற தயக்கமுடையவர்களாகவும் இன்னும் சிலர் தங்களை மறந்து ஊர் ஊராகச் சென்று தங்களுடைய தேவைகளைச் சொல்லி நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.*

*இவ்வாறான தேவையுடைய மக்களை இனங்கண்டு அவர்களுக்குரிய உதவிகளை செய்து கொடுக்கும் போது சமூகத்தில் பஞ்சம், வறுமை, களவு போன்ற செயல்கள் ஒழிக்கப்படுகின்றன.*

*ஆகவே, இவ்வாறான சமூக நலப்பணிகளை நிறைவேற்றுவதில் ஆலிமாப் பெண்கள் அதிக ஆர்வம் காட்ட வேண்டும். இதற்காக கல்வி, தஃவா, மக்களின் வாழ்வாதாரத் தேவை போன்றவற்றில் சமூகத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்தும் கல்வி நிறுவனங்களில் ஊதியம் பெற்றும் சமூக நலப்பணிகளில் ஆலிமாக்கள் செயற்படுகின்றார்களா என்பதை அறியும் நோக்குடன் இத்தலைப்பை தெரிவு செய்து ஆய்வினை மேற்கொண்டுள்ளோம்.*

### *2. ஆய்வுப் பிரச்சினை*

*இவ்வாய்வானது அம்பாறை மாவட்டத்தில் மருதமுனைப் பிரதேசத்தில் 295 ஆலிமாப் பெண்கள் காணப்பட்ட போதிலும்கூட சமூக நலப்பணிகளில் அவர்களின் பங்களிப்பு பின்தங்கியதாகக் காணப்படுவதால் சமூக முன்னேற்றத்தில் தேக்கநிலை நிலவுகிறது.*

### *3. ஆய்வின் நோக்கங்கள்*

- *மருதமுனைப் பிரதேச சமூகநலத் திட்டங்களில் ஆலிமாப்பெண்களின் வகிபாகத்தை இனங்காணுதல்.*
- *சமூகப் பணிகளில் அவர்களின் பின்னடைவிற்கான காரணிகளைக் கண்டறிதல்.*

### *4. ஆய்வு முறையியல்*

*இவ்வாய்விற்காக மருதமுனையில் காணப்படும் ஆலிமாப் பெண்களுள் ஆய்வாளரால் தெரிவு செய்யப்பட்ட ஆலிமாக்களாக மருதமுனையின் 3 பிரிவுகளைச் சேர்ந்த ஐந்து அரபுக் கல்லூரிகளிலிருந்து பட்டம் பெற்று வெளியேறிய ஆலிமாப் பெண்களிலிருந்து 105 பேர் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாய்வு தொகை சார் தரவுகளைப் பயன்படுத்தியுள்ளது.*

*இவ்வாய்வுக்காக முதலாம் நிலைத்தரவுகள், இரண்டாம் நிலைத்தரவுகள் ஆகிய இரு வழிமுறைகளில் தரவுகள் சேகரிக்கப்பட்டன. முதலாம் நிலைத்தரவில் வினாக்கொத்து, நேர்காணல் போன்றவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

*இரண்டாம் நிலைத் தரவுகளாக ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள், இணையத்தள ஆக்கங்கள், அறிக்கைகள், கிராம உத்தியோகத்தரிடமிருந்து ஆவணங்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் MS Excel மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.*



ISBN: 978-624-5736-55-3

***4. தரவுகளின் பகுப்பாய்வு***

*'சமூக நலப்பணிகளில் பெண் ஆலிமாக்களின் வகிபாகம்' எனும் தலைப்பில் இவ்வாய்வு மேற்கொளளப்பட்டது. இங்கு சமூக நலப்பணிகளாக கல்வி, தஃவா, மக்களின் வாழ்வாதாரத் தேவை போன்றவற்றில் தனியாகவோ அல்லது சமூகத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்தோ சமூக நலம் சார்ந்த விடயங்களில் ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகளை குறிக்கின்றது.*

*இதற்காக மருதமுனைக் கிராமத்தில் 3 பிரிவுகளைச் சேர்ந்த ஆலிமாப் பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர்.*


*இதற்கு கிராம சேவகரிடமிருந்து பகுப்பாய்வு செய்யப்பட்ட அறிக்கை மூலம் தகவல்கள் பெறப்பட்டு ஆலிமாப் பெண்கள் இனங்காணப்பட்டனர். இப்பிரிவில் 5 அரபுக் கல்லூரிகளிலிருந்து பட்டம் பெற்று வெளியாகிய ஆலிமாக்களின் விபரம் கீழே காட்ட ப்பட்டுள்ளது.*




வரைபு 1: பட்டம் பெற்ற ஆலிமாப் பெண்க ள்

*மேற்படி வரைபு 1 இன்படி மருதமுனையில் இயங்கிவரும் அரபுக் கல்லூரியான தாருல் ஹுதா அரபுக் கல்லூரியில் இருந்து அதிகளவில் ஆலிமாப் பெண்கள் பட்டம் பெற்று வெளியாகியுள்ள அதேவேளை கல் எலியாவில் அமைந்துள்ள முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி, இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி போன்றவற்றில் இருந்து 11 ஆலிமாக்கள் இக்கிராம் பிரிவில் இனங்காணப்பட்டுள்ளனர். மேலும் ஆயிஷா ஸித்தீக்கா கல்லூரியில் இருந்து பட்டம் பெற்ற 10 ஆலிமாக்கள் உள்ளதோடு பாத்திமா ஸஹ்ரா அரபுக் கல்லூரியில் இருந்து பட்டம் பெற்ற ஆலிமாக்கள் குறைந்தளவினரே உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*இவ்வாறு இனங்காணப்பட்ட ஆலிமாப் பெண்கள் எவ்வாறான செயற்பாடுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றனர் என்பது பற்றிய விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.*




வரைபு 2: பட்டம் பெற்ற ஆலிமாகக்ளின் செயற்பாடுகள்

*வரைபடம் 02இல் பெண் ஆலிமாக்களின் செயற்பாடுகள் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. பகுப்பாய்வு செய்து பெறப்பட்ட தகவல்களுக்கமைய 55% ஆன ஆலிமாப் பெண்கள் தங்களின் தொழில் நிமித்தம் கல்வித்துறையில் ஊதியத்துடன் பங்காற்றி வருகின்ற அதேவேளை 18% ஆலிமாப் பெண்கள் எவ்வித சமூகத் தொடர்பும் இன்றி குடும்பத்துடன் மாத்திரம் சுருங்கி தங்களுடைய கடமைகளைச் செய்து வருகின்றார்கள். மேலும் 10% ஆலிமாப் பெண்கள் சமூகப் பணிகளில் ஈடுபட்டு தொண்டு செய்கின்றனர்.*


*இவ்வாய்வில் பகுப்பாய்வு செய்து பெறப்பட்ட முக்கிய விடயம் என்னவெனில் 17% ஆலிமாப் பெண்கள் முன்னர் சமூகப் பணிகளை முனைப்புடன் மேற்கொண்டவர்களாவர். தற்பொழுது சமூகத்தில் எவ்விதத் தொடர்போ, பங்களிப்போ இன்றி குடும்ப விவகாரங்களை மட்டும் கவனித்துக்கொண்டு தங்களுடைய அறிவையும், திறனையும் சுருக்கிக் கொண்டுள்ளனர்.*

*எனவே, தற்போதைய நிலவரப்படி பகுப்பாய்வுக் உட்படுத்தப்பட்ட தொகையினருள் 35% ஆலிமாக்கள் சமூகப் பணிகளில் ஈடுபடுகிறார்களில்லை. அதேவேளை கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற 55% வீதமானவர்களும் முழுமையாக அவற்றை சமூகநலச் செயற்பாடுகளாகக் கைக்கொண்டு செயலாற்றுகின்றார்களா என்பதை உறுதிப்படுத்த முடியாதுள்ளது.*

***ஆலிமாப் பெண்கள் சமூக நலப்பணிகளில் ஈடுபடாமைக்கான காரணங்களைக் கண்டறிதல்***

*தெரிவு செய்யப்பட்ட ஆலிமாப் பெண்களின் சமூக நலப்பணிகளில் ஈடுபாடு குறைவாகக் காணப்படுகின்றமைக்கான காரணங்கள் அவர்களிடம் மேறகொள்ளப்பட்ட நேர்காணல் மற்றும் வினாக்கொத்து மூலம் இனங்காணப்பட்டன.*


ISBN: 978-624-5736-55-3




வரைபடம் 3: சமூக நலப்பணிகளில் ஈடுபடாமைக்கான காரணங்கள்

*வரைபடம் 3இல் சமூக நலப்பணிகளில் ஆலிமாப் பெண்களின் வகிபாகம் குறைவாகக் காணப்படுகின்றமைக்கான காரணிகள் காட்டப்பட்டுள்ளன. இதில் தொழில் நெருக்கடி (30%), குடும்ப நெருக்கடி (35%) என்பன முக்கிய காரணிகளாக நோக்கப்படுகின்றன. இக்காரணங்கள் 65% ஆனவர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன.*

*இங்கு மருதமுனை ஆலிமாப் பெண்களுக்கு சமூக சேவையில் ஈடுபடுவதற்கு குடும்ப சூழ்நிலையும் தொழில் செய்வதால் ஏற்படும் பொறுப்பும் சுமையும் தடைகளாக அமைந்துள்ளன. மேலும் கணவனின் அனுமதி இல்லாமையால் 8மூ ஆலிமாப் பெண்கள் சமூகப் பணிகளில் ஈடுபடாமை சமூகத்திற்கான வளவிரயமாகக் கொள்ளலாம். கூச்ச சுபாவம், பயம் போன்ற உளக் காரணிகள் 17%ஆன ஆலிமாப் பெண்கள் சமூகப்பணிகளில் ஈடுபடுவதற்குத் தடைகளாக அமைந்துள்ளன. இதனால் இத்தகையோர் சமூகத்தில் எவ்வித ஆக்கபூர்வமான செயற்பாடுமின்றி வீட்டிற்குள்ளேயே தங்களைச் சுருக்கிக் கொண்டுள்ளனர்.*

*10% ஆலிமாப் பெண்களுக்கு சமூகப்பணிகளில் ஆர்வம் இருந்தும் அவர்களுக்கு போதிய வழிகாட்டல் இன்மையால் சமூக செயற்பாடுகளில் ஈடுபடாமல் இருக்கின்றனர்.*

***5. ஆய்வின் முடிவுகள்***

*ஆய்வுப் பகுப்பாய்வின் முடிவுகளின் அடிப்படையில் மருதமுனைப் பிரதேசத்திலுள்ள பட்டம்*

*பெற்று வெளியான ஆலிமாப் பெண்களின் சமூகப்பணிகளில் ஈடுபாடு குறைவடைந்துள்ளமைக்கான காரணங்கள் ஆராயப்பட்டன. மேலும் பெண் ஆலிமாக்கள் சமூக சேவையினை மேற்கொள்வதில் பல்வேறு வகையான சவால்களை எதிர்கொள்க்pன்றனர் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.*

*தனிப்பட்ட, குடும்ப மற்றும் சமூகக் காரணங்களால் சமூகப்பணியை முன்னெடுப்பதில் தயக்கம் காட்டுவதோடு, அதற்காக குறைந்தளவு ஆர்வத்தையே செலுத்துகின்றனர் என்பதும் தெளிவாகின்றது.*


ISBN: 978-624-5736-55-3

*எனவே, கிடைக்கப்பெற்ற முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு குறித்த பிரச்சினைக்கு தீர்வு காணுமுகமாக சமூக நலப்பணிகளை மீண்டும் சுறுசுறுப்பான நிலைக்கு கொண்டு வருவதற்கான வழிமுறைகள் இதன் மூலம் வேண்டப்படுகின்றன.*

***சமூக நலப்பணிகளில் ஈடுபடுவதற்கான ஆலோசனைகள்***

*மருதமுனைப் பிரதேசத்தில் உள்ள முஸ்லிம் ஆலிமாப் பெண்கள் சமூகப்பணிகளில் ஈடுபடுவதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.*

- *எழுத்து மூலம் மார்க்கத்தை எத்தி வைப்பது தஃவாவின் ஒரு வடிவமாகும். முஸ்லிம் பெண்களுக்கு மிகவும் பொருத்தமான வழிமுறையாக இது காணப்படுகின்றது.*
- *சமூகசேவையில் ஈடுபடக்கூடிய ஆலிமாப் பெண்கள் தமக்குக் கிடைக்கும் வாய்ப்புக்களைத் தவற விடாது, தமது அடிப்படை கடமைகளை நிறைவேற்றுவதில் குறைகள் ஏதுமின்றி, நேர முகாமைத்துவத்தைப் பேணி சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.*
- *முஸ்லிம் ஆலிமாப் பெண்கள் தமது அன்றாட நடைமுறை வாழ்வின் மூலம் சமூகப்பணியை மேற்n;காள்ளும் சந்தர்ப்பங்களை அமைத்துக் கொள்ளுதல்.*
- *முஸ்லிம் பெண்கள் மார்க்கத்தைப் பற்றிய நல்லெண்ணங்களை ஏனையோர் மத்தியில் ஏற்படுத்தும் வகையில் இஸ்லாத்தின் போதனைகளை தாம் பின்பற்றி நடப்பதுடன், மாற்றுமதத்தவர்கள் மத்தியிலும், தமது சூழலில் வாழுகின்ற முஸ்லிம்களிடத்திலும் நல்லிணக்கமாகவும், நேர்மையாகவும் நடப்பதோடு, முடியுமாயின் அதன் அவசியம் பற்றி எடுத்துக் கூறவும் முயற்சிக்க வேண்டும்.*
- *ஆலிமாப் பெண்கள் தமது சமூகப் பணியை சிறந்த முறையில் மேற்கொள்ள தற்காலத்திற்கு ஏற்ப அறிவையும் (இல்முல் ஹால்) விளக்கத்தையும், ஆர்வத்தையும் வளர்த்;துக் கொள்ளல் வேண்டும்.*
- *முஸ்லிம் பெண்களின் கல்வி நிலை மற்றும் பொறுப்புக்கள்; குறித்த விழிப்புணர்வு முக்கியபங்கு வகிப்பதால் அவற்றுக்கான ஏற்பாடுகள் இடம்பெற வேண்டும்.*
- *பெற்றோர்களும், கணவன்மார்களும் ஆலிமாப் பெண்களை வீட்டினுள் முடக்கி வைத்திருக்காது, அவர்களைத் தட்டிக் கொடுத்து ஊக்குவிக்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.*
- *மருதமுனைப் பிரதேசத்தில் காணப்படக்கூடிய சமூக அமைப்புக்கள் தஃவா அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களினால் தஃவாவில் ஈடுபடக்கூடிய பெண்களுக்கு பொருந்தும் வகையில் சமூகப்பணிக்கான ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தல் வேண்டும்.*
- *இஸ்லாமிய நிறுவனங்கள், அமைப்புக்கள், சங்கங்கள் மற்றும் பள்ளிவாயில்களில் ஆலிமாப் பெண்களின் சமூகப்பணியினை இடையுறாது தொடர்ந்து மேற்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வதோடு, அவர்களுக்குரிய பொருளாதார ரீதியான தேவைகளையும் நிறைவேற்றக்கூடிய வசதிகளையும் வழங்குதல்.*


ISBN: 978-624-5736-55-3

***6. முடிவுரை***

*ஆய்வுப் பிரதேசமான மருதமுனைப் பிரதேசத்தில் சமூக நலப்பணிகளில் ஆலிமாப் பெண்களின் வகிபாகம் பற்றிய எமது ஆய்வில், ஆய்வுப் பிரதேசத்தில் மார்க்க அறிவினையும் சமூக நலப்பணிகளை மேற்கொள்வதற்கான ஆற்றலினையும் பெற்றுள்ள ஆலிமாக்கள் இங்கு அதிகமுள்ளனர். எனினும் அங்கு அவர்கள் சமூக நலப்பணிகளிலும், தஃவாப் பணியிலும் போதிய ஈடுபாடு காட்டாமைக்கு தனிப்பட்ட, குடும்ப காரணிகள் என பலதும் செல்வாக்குச் செலுத்துகின்றன.*

*இருந்த போதிலும், இச்சவால்கள் மற்றும் தடைகளைத் தாண்டி சமூக நலப்பணிகளில் ஆர்வமுள்ளவர்களாக இருந்தாலும் வழிகாட்டல்கள் இன்மையால் பங்களிப்பு குறைவாகவே காணப்படுகின்றது. இது முஸ்லிம் பெண் சமூகத்திற்கு பெரும் இழப்பாகும். மேலும் திட்டமிட்ட வகையில் சமூகப்பணிகள் மேற்கொள்ளப்படாமையானது இன்றைய முஸ்லிம் சமூகத்தின் பிளவுகளுக்கும், பிரச்சினைகளுக்கும் ஒரு முக்கிய காரணமும் எனலாம். ஆனால் மருதமுனைப் பிரதேசத்திலுள்ள சமூக அமைப்புக்களைப் பலப்படுத்தி, ஆலிமாக்கள் மூலம் பெண்களுக்கும், தேவையுடையோருக்கும் சமூக நலபப்ணிகள் மூலம் முறையாக வழிகாடட்ல் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் அது மருதமுனைப் பிரதேசத்தை மட்டுமன்றி, ஏனைய பிரதேசங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்தி சமூகத்தைச் சீர்திருத்த வழிவகுக்கும் என நம்பலாம்.*

*எனவே, பெண்கள் என்ற வகையில், ஆலிமாக்கள் இஸ்லாமிய வரையறைகளைப் பேணி தனது அடிப்படைக் கடமைகள் மற்றும் பொறுப்புகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தொடர்ச்;சியான முறையில் சமூகப்பணியினை மேற்கொள்கின்ற போது சமூகத்தில் அவதானிக்கத்தக்க மாற்றங்களை தோற்றுவிக்க முடியும் என்பது திண்ணமாகும்.*

***7. உசாத்துணைகள்***


Aboo Shakka, A. (2015). *women's Liberation in the Age of the Prophet.* Dharka Town: (M. Irfan, Trans.) Fuzin Texts.

Al Auda, J. (2017). பெண்களும் மஸ்ஜிதும், Iraq : (R. Najmudeen, Trans.) *தாருல் ஹிக்மா.*

Harris, S. (1989). *Women in Twentieth Century Britain.* British: B.T Batsford limited.

Hasan, A. G. (2003). *The Rights and Duties of Women in Islam.* (A. Mandarola, Ed.) Darus Salam.

Jazeel, Muhamed; Azkiya; Nuskiya;. (2017, December). Samooha Sevai Paniyil Muslim Penkalin Edupaadum Avarhal Meethana Islamiya Iyakkankalin Selvakkum. *Proceedings 7th international symposium, SEUSL*.

Jazeel, Muhammed; Nasmiya; Rukkaya; Theeshan;. (2017, December). Palhalaikalaha Manaviyarin Thawa Edupadum Ethirnokkum Savalhalum. *proceedings of 7th international symposium, SEUSL,*.

Omari, J. (1999). *மக்கள் சேவை*. Chennai: (J. Ahmed, Ed., & M. Ali, Trans.) Islamic Research Institute.

Omeri, J. (2002). r%ff; fl;likg;gpy; ngz;fspd; gq;F. Jamaliya: (S. Beham, Trans.) Islamic Foundation Trust.

Qardawi, Y. A. (1997). *நாளைய முஸ்லிம் பெண்.* India: (M. Faleel, Trans.) *அல் கலம்.*

Reda, N. (2005). *Women in the Mosque Histirical Perspectives.* Australiya: (Bunyameen, Trans.) Mellinam.

Sathar, A. (2015). *Maanpurum Maruthamunai Varalathup Pathivuhal.* Maruthamunai: Samoha Menpaddu Mayyam.

Zain, R. (2012). *Uyir Thudippulla Pen AlumaiKal.* Colombo: Focus Media.

دار الهدى . .شخصية المسلم4102(. . .علي هاشمي ,م)

دار الهدى .شخصية المرءة4102(. .علي هاشمي)

نصائح المسلم4101(. محمد المصري)

*நேர்காணப்பட்டோர்களின் விபரம்*

*அஷ்ஷெய்க், ஏ.ஆர்.எம். சுபைர் (நழமீp) (உலமா சபை, மருதமுனைக் கிளை முன்னாள் செயலாளர);*

*அஷ்ஷெய்க், எம்.எச.;எம். ஜெலீல் (ஹாமி) (உலமா சபை, மருதமுனைக் கிளை துணைத் தலைவர்)*

*அஷ்ஷெய்க், ஏ.ஏ. கியாஸ் முஹம்மது (நழீமி) (ஆயிஷா ஸித்தீக்கா அதிபர்)*

*அஷ்ஷெய்க், எப். எம் அஹ்மத் அன்சார்மௌலானா (நழீமி) (உலமா சபை, மருதமுனைக் கிளை, பதில் தலைவா);*

*மௌலவியா ஹினாயா அப்துல் றஹீம் (கல்-எளிய)*

*ஆசிரியை ஏ.ஆர்.அறபு (சமூகநல அமைப்புத் தலைவி மருதமுனை)*

*ஆசிரியை எம். ஏப். ஐனுல் கிபாயா (பெண்கள் நல அமைப்பு, மருதமுனை ஒருங்கிணைப்பாளர்*

*றியாஸா எம் பைறூஸ் (DDE, கல்வி வலயம், களுவாஞ்சிக்குடி)*

*மௌலவியா ஏ. ஆர் காமிலா (கிராம உத்தியோகத்தர், கல்முனை பிரதேசம்)*

*மௌலவியா சீனா அப்துல் மாஜித் (கல் எளிய)*

*மௌலவியா நஜிமுன்னிஸா முஹமம்மது ஷூ ஹைப் (இஸ்லாஹியா)*

*மௌலவியா தானியா அப்துல் ஹாதி (தாருல் ஹுதா, மருதமுனை)*

*மௌலவியா பஹீமா முஹம்மது இஸ்மாயீல் (ஆயிஷா ஸித்தீக்கா)*